செ.வெ.எண்: 53 நாள்:22.11.2021

**நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வாராந்திர மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (22.11.2021) நடைபெற்றது.

வாராந்திர குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வங்கிக் கடன் மற்றும் உதவித்தொகை, குடும்ப அட்டை, வேலைவாய்ப்பு, கல்வி உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து மொத்தம் **203** மனுக்கள் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

நாகப்பட்டினம் வட்டம் மஞ்சக்கொல்லை கிராமம், குமரன் வடக்கு வீதியை சேர்ந்த திரு.ரவிச்சந்திரன் மகன் சபரிநாதன் என்பவரின் மருத்துவ செலவிற்காக மாவட்ட ஆட்சியரின் தன்விருப்ப நிதியிலிருந்து உதவித்தொகையாக ரூ.12,000/-க்கான காசோலையினையும், மாற்றுத்திறனாளி நலத்துறை சார்பில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான பராமரிப்பு உதவி தொகையாக தலா ரூ.1500/- வீதம் 5 நபருக்கு மொத்தம் ரூ.7,500/- க்கான காசோலையினையும், மற்றும் வேளாங்கண்ணி பேரூராட்சியை சேர்ந்த ஜீவா (மாற்றுத்திறனாளி) என்பவர் அளித்த மனுவினை ஆய்வு செய்து உடனடி தீர்வாக மனுதாரருக்கு ரூ.6,850 மதிப்புள்ள மூன்று சக்கர நாற்காலியினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

முன்னதாக, உலக சிக்கன நாள் கொண்டாடப்பட்டதை முன்னிட்டு 30.10.2021 அன்று நடைபெற்ற விழாவில் சிறுசேமிப்பு குறித்து கவிதைபோட்டி, பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, விழிப்புணர்வு சொற்றொடர் போட்டி, வினாடிவினா போன்ற பல்வேறு போட்டிகள் கொரோனா தொற்றின் காரணமாக இணையதளம் மூலமாக நடைபெற்று அதில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று(22.11.2021) வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.வி.ஷகிலா, சமூக பாதுகாப்பு துணை ஆட்சியர் திரு.கு.ராஜன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.குணசேகரன், மாவட்ட நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) திரு.பிச்சைமைய்தீன், வட்டார வளர்ச்சி அலுவலர் (சிறுசேமிப்பு) திருமதி.ஜெ.செபஸ்தியம்மாள், மாவட்ட கல்வி அலுவலர் திரு.மீ.உதயகுமார், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.தனபால் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**